உ

குமரநாதன் துணை.

புதிய பிளேட் சங்கீத ரத்னங்கள்

மிஸ் **K. B.** சுந்தராம்பாள், மாஸ்டர் **S. G.** கிட்டப்பா, சங்கீத சுரசாகித்ய **S. V.** சுப்பையா பாகவதர், மிஸ்டர் **A. S.** ராஜப்பா, பபூன் **N. S.** சண்முகம் ஆகிய

யுவராஜ வித்வசிரோண்மணிகள் பாடிவரும்

இந்திய முடிசூடா மன்னர்

# பண்டித மோதிலால் நேரு

# ஆனந்த

# கிராமபோன் சங்கீதம்

**4-ம்** பாகம்.



மதுரை புதுமண்டபம், புத்தக வியாபாரம்

**V. கருப்பணபிள்ளையவர்களால்**

மதுரை மீனாக்ஷி விலாஸ் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

காபிரைட்] 1931. [விலை அணா 2.

# புத்தக விளம்பரம்.

| | | | |
|---|---|---|---|
| K. B. சுந்தராம்பாள் பாடிய புதிய பிளேட் பண்டித மோதிலால் நேரு ஆனந்த கிராமபோன் சங்கீதம் 1, 2, 3, 4 பாகங்கள் பாகம் 1-க்கு | 0 | 2 | 0 |
| ஷை 4 பாகமும் ஒரே கட்டடம் | 0 | 6 | 0 |
| S. V. சுப்பையா பாகவதர் பாடிவருகிற பூங்கா விநோத சிங்காரப் பாட்டுகள் 1, 2 பாகம், பாகம் 1-க்கு | 0 | 2 | 0 |
| மதுரை பபூன் N. S. ஷண்முகம் பாடிவரும் புதிய பிளேட் ஒரிஜினல் புதிய பபூன் பாட்டு 1, 2, 3 பாகங்கள் பாகம் 1-க்கு | 0 | 2 | 0 |
| மதுரை V. நடராஜ பிள்ளை அவர்கள் இயற்றிய மதுரைவீரசுவாமி வர்ணிப்பு | 0 | 2 | 0 |
| ஷையார் இயற்றிய தேசீயகீதம் | 0 | 2 | 0 |
| ஷையார் இயற்றிய வேதாரண்யம் உப்புச் சத்யாக்கிரக கீதமென்னும் காங்கிரஸ் பாட்டு | 0 | 2 | 0 |
| கவிக்குஞ்சரம் அவர்கள் இயற்றிய நாட்டுத்திலகமென்னும் ராட்டுப் பாட்டு | 0 | 5 | 0 |

மேற்கண்ட புஸ்தகங்களும், இன்னும் இதர புஸ்தகங்களும் மொத்தமாகவும், சில்லரையாகவும் வியாபாரிகளுக்கு சவுகரியமாயும் கீழ்கண்ட விலாசதாரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

எமது விலாசம்:—

V. கருப்பண பிள்ளை,

புக்ஷாப், புதுமண்டபம், மதுரை.

உ

குமரன் துணை.

இந்திய முடிசூடா மன்னர்

# பண்டித மோதிலால் நேரு

ஆனந்த

# கிராமபோன் சங்கீதம்.

வெண்பா.

தேசபக்தர் போற்றுந் திருவுடைய மோதிலால்மேல்
நேசமுற்ற கீதம் நிகழ்த்துதற்கு — வாசமுற்ற
பாரதத்தாய் பொன்னடியைப் பண்புடனே தோத்தரித்தேன்
சீரருளைத் தந்திடவே தேர்ந்து.

---

புதிய பிளேட்

## மகாத்மா காந்தி லண்டன் விஜயம்.

(காமி சத்யபாமா கதவை திறவாய் என்ற மெட்டு.)

பல்லவி.

காந்தி லண்டன் வாரார் கைகூப்பி அழைப்பீர்
கைகூப்பி அழைப்பீர்
அழைப்பீர்
அழைப்பீர் மகான் (காந்தி)

அநுபல்லவி.

சாந்தி இல்லாது பேசும் சர்ச்சில வைராக்யங்களே
ஆழ்ந்து நன்றாக யோசிப்பீர்
யோசிப்பீர்
யோசிப்பீர் மகான் (காந்தி)

முப்பது கோடிமக்கள் முயற்சிக்கோ ராதாரமாம்
அற்புதஞான யோகியாம்
யோகியாம்
யோகியாம் மகான் (காந்தி)

ஊக்கமாகப்பிறப்பு உரிமை பெறக்கோரினும்
பாஸ்கர நீதி கூறினும்
கூறினும்
கூறினும் மகான் (காந்தி)

---

## மிஸ். K. B. சுந்தராம்பாள் புதிய பிளேட்

இராகம்-கல்யாணி—தாளம்-ரூபகம்.

அநுபல்லவி.

பாவன மதுரா நிலையே பாண்டியராஜ தனயே
பவாரக தாளாதிக பரிதோஷித ஹிருதயே
பாவுக பலப்ரதாயினி பக்திமோத சாந்தாயினி
ஸேவக பாப விமோசனி ஸ்ரீ கதம்ப வனவாசனி

பல்லவி.

தேவி மீனாக்ஷியமிர்தம் தேஹிமே சந்ததம் (தே)

சரணம்.

ஹிமகரதி பவதனே விமலகுந் தர தனே
ரமணீ யமணி ஸதனே ரக்ஷித மதனே
ஸோமசர ஜனக ஸஹோதரி சுந்தரேச ஹ்ருதயேஸ்வரி
ஸமர விஜித நிகிலாமரி ஸாதுவ சங்கரி சங்கரி
கமல ஜாதி ஸோரபாலினி
கனதாசுப குணசாலினி

ஸமதானே கபகாமினி
ஸங்கீத ரஸகலாமினி

சிட்டா ஸ்வரம்.

ஸா ரிஸநி தநிநிதபம கதமாகரி ரமகஸநி
ரீரி தாநி ஸரிகமபரி கமபதாப மபத பதநி
ஸரிகரிஸ நிஸரிரிஸநி தநிஸஸநித பமகமபத
நிஸரிஸரி நிதபமகரி நிதாநிஸரி கமாபதநி (தே)

---

## ஷையார் புதிய பிளேட் பாட்டு.

இராகம்-தேவகாந்தாரி—தாளம்-ஆதி.

பல்லவி.

தக்கோர் அபிமான
ஞான சீலா (தக்)

அநுபல்லவி.

சகல புவன ரக்ஷ
கா வனு கூலா (தக்)

சரணம்.

எக்காலமு முந்தன் பொற்றாள் பணிந்துகொண்டு
இருக்க நீ வர மருள் வாய் (தக்)

ஷை சந்தம்.

கந்த மூல பிர பந்த மானைத் தேடி
கந்த மாரு மர விந்த பாதஞ் சூடி
வந்தனு திகள் அகந்தமே சொலி
விழுந்து பூமியில் எழுந்து கைந்துருகி (தக்)

துங்க சாது ஜன சங்கமோடு கூடி
பொங்கும் ஞான அகலங்கவாரி ஆடி
அங்கமே பாவ சங்கொளப் பல ப
தங்களோடு சுப மங்களங்கள் சொலி (தக்)

பழுதிலாது தினம் முழுது முன்னை நாடி
தொழுது நேசமுடன் அழுது பாடி யாடி
ஒழுகு செந்தணலின் மெழுகு போல மனம்
இளகியே யதிக புளகிதாங்க முடன் (தக்)

---

## S. G. கிட்டப்பா பாடிய புதிய பிளேட்

இராகம்-இந்துஸ்தான் பியாக்—தாளம்-ஆதி.

பல்லவி.

தேவாசுர குலத்தோரே
திவ்யாமுதம் உமக்கே நானே
தாரேன் பொறுப்பீரே (தே)

கேவல மிதே கலகம்
கண்யவான் நீரே செய்தால்
கேலி பேசு மிவ் வுலகம் (தே)

விரோதம் வேண்டா மிதை
விட்டு நீ ரிருப்பீரே
விவேகமாக இதையே
நீர் கவனிப் பீரே (தே)

ஷையார் பாடியது.

இராகம்-பைரவி—தாளம்-ஆதி.

பல்லவி.

ஜய ஜய கோ குல பாலா
ஜய சகலா க ம மூலா (ஜய)

அநுபல்லவி.

தயயா மாம் கோபாலா தீனம்
பாலய பாலா (ஜய)

சரணம்.

தேவ மயா சரிதா மிதம்
தீன தயா அபராதம்
ஸ்ரீவ சுதா திபக்ரு பையா
கேவல மி அநு னுஹி (ஜய)

சுக்ஷேத பகதே ஹே
ஈ சகஜம் திநி நீ ஹே
விசாக்ஷி சதமோ ஹே
வேதாம் தா கமகே ஹே (ஜய)

ஜக தண்ட கோடிதனே
ஜந்து ரந்த ரசு தனே
சுசு நிகசம் ஜாத மனே
அபிரிமி தாஸ் ருத தேனே (ஜய)

---

சங்கீதச் சண்டமாருதம்

## S. V. சுப்பையா பாகவதர் பாடிய புதிய பிளேட்

இராகம்-செஞ்சுருட்டி—தாளம்-ஆதி.

பல்லவி.

பவளக்கொடி மீதிலாசை மறப்பேனோ நானே
மறப்பேனோ நானே மாய பிரானே (பவ)

மார்க்க மொன்று சொல்லேன் — நீ
தீர்க்கமாக வெல்ல — அவளை
மணமாலை சூட்டி வைத்து
பார்க்க வேணு மல்ல (பவ)

சரணம்.

கனக சித்ரமணி மஞ்சத்தே
கலந்து நானுஞ் சேர
என் கருத்துக்கும் பொருத்தமான
கண்ணிகை முன் சார
கண் காணு காக்ஷி
கற்பகத்தின் ரூக்ஷி
காணு வீரத் தாக்ஷி
கலப மயில் போலிருந்தால்
உலக மெங்குந் தாக்ஷி (பவ)

---

சங்கீத சுரசாஹித்ய

**S. V. சுப்பையா பாகவதர் அவர்கள்**

புதிய பிளேட்

இராகம்-தங்யாசி—தாளம்-சாபு.

பிளேட் No. 2865. பல்லவி.

காம சுந்த ராங்கி உனது
காதலோங்கியே மனமுருகுது அறிகுவாயினி (காம)

மகுடங்கள்.

கட்டுப்பட்டேன் கணைமலர்
பட்டுக்கெட்டேன் இதுதகி (காம

கடுந்துயரம் மிகுந்திடவே
இளங்குயில்கள் தருந்தொனியின்மிசை (காம)

கட்டுப் பட் டிருதனமதை
விட்டுப் பிரிதொரு காமதில்கொடு (காம)

கவிக்குளுயர் பாவினமே
படுத்துமலர் சிறப்படைய
விலக்கிடுவாய் மலரணையில் அதிவிகித (காம)

அநுபல்லவி.

தேமிகுந்து மேசிறந்து
திடஞ்சிறிது ரசங்கொடிது
அகங்குளிர உலகு புகழுவரு (காம)

சரணம்.

வண்டு மொய்த்த மலர்க்கூந்தலாளே
மாமதியை நிகரும் முகத்தாளே
ஒண்டுமா ஜெகத் தும் மகத்தாளே
உடல் பொருள் உனதென சகலமும்
திடமுறத் தருகிறேன் அணைய வா (காம)

---

சங்கீதக்கியாணி

## விசலூர், N. சுப்ரமண்ய பாகவதர் புதிய பிளேட்

தசரதராஜ குமாரா என்ற மெட்டு.

பல்லவி.

திருநடராஜ குமாரா அதிதீரா
அலங்காரா அருள் தாராய் (திரு)

அநுபல்லவி.

திருப்பாற்கடற் சயன திரு மாலின் மருகா
திருவடி பணிவோரைக் காத்திடும் முருகா
திருப்புகழ்ச் சிந்தாலுன்னை தினந் துதித்தேன் குகா
திருப்பரங்கிரி வளர் வேலா சத்தி பாலா
குணசீலா யென்னை யாளாய் (திரு)

அருமையுடனே யும்மை அண்டினேன் நானே
அருட்கடலென்ற பெயர் கொண்ட கோமானே
வறுமையகற்ற என் முன் வாருஞ் சீமானே
வள்ளிக்கிசைந்த மணவாளா கண்ணாளா
தயாளா என்னை யாளாய் (திரு)

---

கோயம்புத்தூர்

## மிஸ்டர், A. S. ராஜப்பா புதிய பிளேட்

இராகம்-தேசிகதோடி—தாளம்-ஏகம்.

பல்லவி.

கந்தையா நானுனக்கு மகனல்லவா
கனவானே குணவானே திருக்கழுகுமாமலைக் கடவுளே (கந்)

மகுடங்கள்.

கருத்திலொரு வருத்தமதை
தவிர்த்தருளும் திருத்தணிகை குழந்தை (கந்)

கானக் குறமகள் மருவிய
யானைக்கொரு முகந் தழுவிய (கந்)

கர்த்தனே மலரடி தஞ்சம்
உத்தமியனுதினங் கொஞ்சும் ரஞ்சித (கந்)
ஆறுமுக குகாவுனைவிட வேறுகதியில்லை (கந்)
அந்தரங்க விந்தை மேவும் அமிர்தா (கந்)

அநுபல்லவி.

என் தாயு மானவனே
இன்பம் பொங்கும் செந்தூர்ப்ரமானந்தனே
ஏழை முகம் பாரய்யனே
ஏது சூது மீது கோபமா
மரகதநிற கழனிதனில் நடமிடும் பழனி
கந்தமலர்ப் பாதமதிலே யானந்தந்தான்—சதா
காலமெல்லாம் போற்றுவதுன் மைந்தன் தான்
இது செஞ்சொற் நாகமுத்து சந்தந்தான்
செப்புஞ்ஜெய வெள்ளைச்சாமி சொந்தந்தான்
க்ருபையருள் மெஞ்ஞான (கந்)

---

ஷியார் புதிய பிளேட்

இராகம்-செஞ்சுருட்டி—தாளம்-ஆதி.

கண்ணிகள்.

கீரிமலை க்ஷேத்திரத்தின் பெருமை—எப்
பாரிலுமறியும் தீர்த்தத் தருமை—ஸ்நானம்
கோரிட நகுலேஸ்வரன் கீரிமுக மாக நேரில்
காக்ஷி கொடுத்த மாக்ஷி (கீரி)

நீரிலுமொருபாக முப்புத் தண்ணீர்—ஸ்வாமி
நீதியால் மற்றொரு பக்கம் பன்னீர்—என
நினைத்து அருந்துவோர்க்கு—வினைப் பயன்களை தீர்க்கும்
மூர்த்தி சேவை நேர்த்தி (கீரி)
நகுலாம்பிகை மகிழும் திருவே—எந்த
நாளுமே யுனைத்தொழுதேன் குருவே—என்றும்
நாயினுங் கடையனுன தீயனை யடிமைகொள்ளும்
நாதா குண நீதா (கீரி)
தெய்வங்களில் நீயே சக்ரவர்த்தி—மூன்று
தமிழுக்குரிய அபி விர்த்தி—இந்த
தெள்ளமு தெனகார்மேகம் உள்ள மதிலே உறையும்
தேவே கவிக்கோவே. (கீரி)

---

கூடலூர், சங்கீத நிபுணன்

## A. V. நாகசுந்தர ராஜா புதிய பிளேட்

இராகம்-பைரவி—தாளம்-ஆதி.

பல்லவி.

தேடி வந்தேனே வள்ளி மானே—இனி
மோடி செய்யாதே செழுந்தேனே—தானே (தே)

மகுடங்கள்.

தீனமான குயிலொடு பரண் மிசை
கான வாழ்வி லுறுதல் சரியல்லவே (தே)
தித்தித்திடும் ஆலோலத் தொனியதில்
நத்திக்கொடு மாலாகிக் கருதினதால் (தே)
சித்தஜனின் கொடு பித்தமலர்பட
இத்ததி வெட்கிட முத்தமளித்திட (தே)

சரணம்.

கோடி நமஸ் காரமே
கோரினே னின் நேரமே
கோமளாங்கி மதுரித பாஸ்கர
சாமி கீத சமரச துணைபெற (தே)

---

கூடலூர், சங்கீத வித்வான்

## A. V. நாகசுந்தர ராஜா புதிய பிளேட்

இந்துஸ்தான்-பியாக்—தாளம்-ஆதி.

பல்லவி.

திருவாவினன் குடி தேவா ஷண்முகா
சேயனேன் மனத்துயர் தீர்த்திடுவாய் குகா
முருகாவெனப் புகழ்ந் துருகா தலைந்து நான்
வெறு மாயை யாமவ் விருள் மூடி நின்றேன் (திரு)
பிழைகள் முற்றும் பொறுத் தெளியோர்க்கிரங்கிடும்
பெருமானையன்றிப் பேசுதற் கெவருண்டு
மழையில்லாது மா சுறும் பயிர் போல
மைந்தனுன் வாடுதல் மகிபனுனக்கழகோ (திரு)

---

## கோகிலகான. மிஸ். சுப்புலட்சுமி புதிய பிளேட்

இராகம்-பைரவி—தாளம்-ஆதி.

பல்லவி.

வேலவரே உம்மைத் தேடியொரு மடந்தை
விடிய முழுதும் காத்திருக்கும் வகையென்ன (வே)

அநுபல்லவி.

வாலிபமுஞ் சேல்விழியும் வில்லும் புருவ வடிவ
நூலிடையும் மதிவதனமும் மேலும் அவள்
மேனி பசும் பொன்னிறமும் மின்னற் கொடியோ
அன்னநடையோ ஓயிலாகவே (வே)

சரணம்.

விதவிதமாகவே பச்சிளங் கொங்கை மீதினில்
வெண்படி தரித்துப் பல்லும் வரிசையும்
கதலித்துடையும் அதரக்கண் சொருக்கழகும்
கருத்தையுருக்கும் கலகலவென்னும் நடையும் (வே)

---

கிளிக்கண்ணி மெட்டு.

இராகம்-உசேனி—தாளம்-ஆதி.

கண்ணிகள்.

எட்டிக்குடி வேலனடி எங்கள் முருகேசனடி
அட்டதிக்கெங்கும் பரவி ஞானத்தங்கமே
அடியாரைக் காப்பவண்டி (எட்டி)

வேலின் முதல்வனடி வித்தகன் புதல்வனடி
மாலின் மருகனடி ஞானத்தங்கமே
மந்திர முருகனடி (எட்டி)

கார்த்திகைக் குமாரனடி காரண விஸ்தாரனடி
பார்த்திப சிங்காரனடி ஞானத்தங்கமே
பார்புகழ் செந்தூரனடி (எட்டி)

குன்றுதோறும் வாழ்பவண்டி குறமகள் பாகனடி
என்று மனுகூலனடி ஞானத்தங்கமே
ஏகாந்த லோலனடி (எட்டி)

## மதுரை, பபூன் N. S. ஷண்முகம் புதிய பிளேட்

இராகம்-பியாக்—தாளம்-சதுஸ்ரம்.

பல்லவி.

சென்னை ராஜக்குட்டி என்
சீனி சக்கரைக் கட்டி அடி (செ)

அநுபல்லவி.

அன்னமே சீமாட்டி உனக்கட்டிகை மயிர் மாட்டி
உயர் மின்னு ஜப்பான் சீட்டி
மேல் பூட்டிக் கோடி பியூட்டி வாடி (செ)
உங்கப்பனை போய்க் கேட்டேன்
ஒப்பந்தம் வாங்கிப் போட்டேன்
தப்பவிட மாட்டேன் குட்டி
தாலி பண்ணி போட்டேன் வாடி (செ)
தஞ்சை சண்முக சாமி உன்
தனுக்குக் கேற்ற சாமி தமிழ்
செஞ்சொற் கூடற் பூமி இதில்
சேர்ந்த பானு சாமி வாடி (செ)

## கள்ளபார்ட் A. M. கார்மேக ஆசாரி புதிய பிளேட்

பாட்டு.

அம்மாளு உங்கம்மாளுக்கு மருமகப் பிள்ளையடி
தங்கம் பிள்ளை சொந்த மருமகண்டி
வெப்பாரும் ஒப்பாரும் மைத்துனண்டி
வெம்மாளும் ஒம்மாளும் நாத்தியடி
தப்பாது நானுனக்கு மச்சாண்டி
இப்போதே தாலியைக் கட்டுவண்டி
கட்டுவெத்திலே தாரேண்டி
எட்டுப் பாக்குத் தாரேண்டி
டப்பிச்சுண்ணும்பு தாரேண்டி
போட்டுக்கூட வாயேண்டி

173229

காமத்துடிக்காரி யுன்னைத் தாண்டி
இனியுனக்கென்ன வேணுண்டி மாமனைக்
போடி உங்கத் தாயார் சொன்ன நான்
பெரிய மனுஷன் வீட்டுப் பிள்ளையல்லவா
உனக்கு மாமனல்லவா பல்

முதலில்லாத வியாபாரக்காரனுட மகனல்ல
நானே சிங்காரண்டி நானே ஒய்யாரண்
நானே கெம்பீரண்டி நானே கார்மேகண்
நாக்குலே மூக்குலே நத்துப் புல்லாக்குலே
பேச்சுப்பாராக்குலே சொல் ஜோக்குலே
டாஸ்கு டப்பா டோபல்ஷா வயதிளமடி
நல்ல பாருத்தியட்டி குட்டி நல்ல மருந்தடி
தேகமெலிந்து தேஜஸ் குறைந்து
செல்வங் குறைந்திங்கவே

நம்பிக்கை கோண்டேல்லோரும் என்ற மெட்டு.

பல்லவி.

தகததிங் கிணத்தோ மெனவே தில்
லானா பாடுவோம்—தில்
லானா பாடுவோம்—தில்
டோமரி யாடுவோம் பல்.

அநுபல்லவி.

சுகம் பெறும் வழியதைத் தேடு—உன்
அகமகிழ்வாகவே கூடு—இச்
ஜெகமதில் புகழ்ந்திடும் விகசிதமயிலே நீ
சேர்வாயன் போடு—பல்
மாமதன் திருவிளை யாட்டு—உன்
மாமனே மருவிப்பா ராட்டு—சத
மதிவிதாண கவி ததிபுகல் கார்மேகம்
மணம் போல் மணஞ்சூட்டு—பல்

முற்றிற்று.

# புத்தக விளம்பரம்.

| | | | |
|---|---|---|---|
| K. B. சுந்தராம்பாள் பாடிய பண்டித மோதிலால் நேரு ஆனந்த கிராமபோன் சங்கீதம் 1, 2, 3, 4 பாகங்கள் பாகம் 1-க்கு | 0 | 2 | 0 |
| ஷை 4 பாகமும் சேர்ந்த கட்டடம் 1-க்கு | 0 | 6 | 0 |
| S. V. சுப்பையா பாகவதர் பாடிவருகிற பூங்கா வினோத சிங்காரப் பாட்டுகள் 1, 2, பாகம், பாகம் 1-க்கு விலை | 0 | 2 | 0 |
| மதுரை பபூன் N. S. ஷண்முகம் பாடிவரும் புதிய பிளேட் ஒரிஜினல், புதிய பபூன் பாட்டு 1, 2, 3, பாகங்கள் பாகம் 1-க்கு | 0 | 2 | 0 |
| மதுரகவி V. நடராஜ பிள்ளை அவர்கள் இயற்றிய மதுரைவீரசுவாமி வர்ணிப்பு | 0 | 2 | 0 |
| ஷையார் இயற்றிய தேசிய கீதம் | 0 | 2 | 0 |
| ஷையார் இயற்றிய காங்கிரஸ் பாட்டு | 0 | 2 | 0 |
| ஷையார் இயற்றிய ஜவர்லால் நேரு சுயராஜ்ய திலகம் | 0 | 2 | 0 |
| S. G. கிட்டப்பா மிஸ் K. B. சுந்தராம்பாள் இவர்கள் பாடிவரும் நந்தனார் டிராமா | 0 | 4 | 0 |

மேல்கண்ட புஸ்தகங்களும் இன்னும் இதர புஸ்தகங்களும் வியாபாரிகளுக்கு வேண்டிய சில்லரை தினுசுகளும் விலை சவுகரியமாகவும் கீழ்கண்ட விலாசதாரிடம் நேரிலும் V. P. மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

விலாசம்:—

**V. கருப்பண பிள்ளை,**

புக்ஷாப், புதுமண்டபம்,

மதுரை.